# THE KOVAI HERALD
தி கோவை ஹெரால்டு

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 47 | English & Tamil Weekly | 26.4.2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-




## KMCH Hosts "Anaesthesia Update 2026"




THE KOVAI HERALD

Kovai Medical Center and Hospital (KMCH) successfully organized a premier academic symposium, "Anaesthesia Update 2026 Neuromuscular Blockade in the Era of Sugammadex," held at the KMCH Auditorium.

The conference addressed a critical shift in modern anaesthesia: the evolution of neuromuscular blockade and the transformative impact of Sugammadex. As surgical procedures become more complex, the ability to achieve rapid, predictable, and complete reversal of muscle relaxants has become a cornerstone of patient recovery and safety.

Dr. Nalla G Palaniswami, Chairman and Managing Director of KMCH, Dr. Arun N Palaniswami, Executive Director of KMCH, were present on the occasion

The event was well executed by the Department of Anaesthesia at KMCH. The organizing committee, praised for the program's academic depth, included consultant anesthesiologists from KMCH: Dr. Subbiah Chelliah (Organising Secretary), Dr. Maheshwaran V. (Co-organising Secretary), Dr. Arun Prasath, Dr. Harendra Singh Jat, Dr. Arun Kumar D. and Dr. Vivekananthan P.

## Robot Welcomes Voters with Sweets at Coimbatore Polling Booth

In a unique and innovative initiative that drew the attention of voters, a robot named "Tina" welcomed people arriving at a polling booth in Coimbatore during the Tamil Nadu Assembly elections on Thursday.

The special attraction was seen at the polling booth set up on the campus of the Government Arts College in Coimbatore. Instead of volunteers greeting voters, the robot warmly welcomed them and distributed sweets, creating excitement among the public.

Designed and developed by a student of the same college, the robot was dressed in traditional attire to reflect Tamil culture and heritage. Operated with the help of a joystick device, Tina greeted voters waiting in the queue with a smile and handed out candies, adding a technological touch to the democratic process.

The initiative quickly became a major attraction at the polling station, with many first-time voters and youngsters stopping to take selfies and photographs with the robot. Voters appreciated the effort, saying it brought a refreshing and cheerful atmosphere to the polling booth.

Officials and members of the public praised the student's creativity, noting that the initiative helped reduce the tension often associated with election day and also created awareness about the use of technology in public spaces.

The innovative welcome at the booth became one of the highlights of polling day in Coimbatore, with the robot drawing widespread appreciation both at the venue and on social media.

## One-Way Special Train Announced Between Mangalore and Podanur

THE KOVAI HERALD

To clear the extra rush of passengers during the summer travel season, the Railways has announced a one-way special train service between Mangalore and Podanur.

According to a release issued by the Salem Railway Division, the special train (No. 06131) will depart from Mangalore Central at 11 p.m. on April 24 and is scheduled to reach Podanur Junction at 6.15 a.m. the following day.

The train will halt at major stations including Kasaragod, Payyanur, Kannur, Thalassery, Vadakara, Kozhikode, Tirur, Shoranur and Palakkad before arriving at Podanur.

Railway officials stated that the special service has been introduced as part of additional arrangements to manage the heavy passenger flow during the holiday period and to provide more travel options for passengers heading towards Coimbatore and nearby areas.

Passengers have been advised to check the availability of tickets and train timings through official railway booking platforms and enquiry counters before travel

# Ecology is Today's Issue Not Tomorrow's

THE KOVAI HERALD

Sadhguru: Indian rivers have depleted dramatically in just a matter of a few decades. Many rivers and streams have completely gone dry. Fortunately, our rivers are mostly forest-fed, not glacier-fedwe cannot make it snow whenever we feel like it, but we can restore forest vegetation.

The Connection Between Trees, Soil, and Rivers

India has an average of forty-five days of rain or precipitation. What comes down in those forty-five days, we are required to hold in the land for three-hundred-and-sixty-five days, and let out slowly into our rivers and other water bodies. You can hold the water in the land only if the soil has the necessary organic content. Generally, it is understood that to call soil as soil, there should be a minimum of 2% organic content, but today for nearly twenty-five percent of India's land, the organic content is 0.05%. That means, at a rapid pace, we are converting rich soil into sands, desert. Today, if you fly across India, you will see mostly brown, arid land and very few green patches.

So how do we put back the organic content? Where does it come from? The only two sources are animal waste and leaves from trees. Does that mean we have to bring back forests everywhere?



That is not possible, but a simple solution we have proposed is to convert the twenty-five percent of riverine land that is owned by the governmentexcept for what is allocated for development in the next fifty yearsinto forests. The remaining land is farmland. Here, the only way forward is agroforestry, or tree-based agriculture.

Cauvery Calling A Game Changer for the Tropical World

If we can encourage farmers to shift to tree-based agriculture, the organic material from the trees, as well as waste from farm animals, will replenish the rivers and soil. It will also be a highly profitable venture for the poor farmer. Hence, this is not ecology versus economy; reviving ecology can be very lucrative for the land owner. This is the essence of our Cauvery Calling campaign.

Cauvery Calling is a campaign to revitalize Cauvery River which has alarmingly depleted by over 40%. We are shifting farmers to agroforestry and planting 2.42 billion trees in the Cauvery River basin. This will cover one third of the basin under shade and enhance the river flow. This practice of tree cultivation with other crops in between has many benefits for the farmer including improved soil fertility, better crop yields, and increase in groundwater levels. But above all, the farmer's income multiplies manifold from the sale of timber, fruit and other tree produce. In Tamil Nadu we have converted 69,760 farmers into tree-based agriculture and within five to seven years, their income has increased between 300-800%. Once we show this as a profitable, implementable large-scale model in the Cauvery basin, it will naturally be replicated for other rivers. This is a game changer not just for India but for the tropical world.

A Conscious Planet - Bringing Solutions to the World

Ecology is no more tomorrow's issue that the next generation will suffer. It is today's issue. Right now, over 95% of the global population have absolutely no awareness of the ecological disaster building around them. Ecological awareness is confined only to a small segment of people, and even among them, the idea of ecology is largely limited to using less water while showering or turning off the tap when brushing teeth. It is wonderful that people are conscious about what they are using, but this is not a comprehensive ecological solution. Mobilization of finances, people and political class is paramount.

I have been working with United Nations agencies and other forces, and proposing this idea of a "Conscious Planet." There are 5.2 billion people living in countries with the ability to vote and elect their nation's leadership. Out of this we want to bring at least three billion people on board to ensure that ecological issues elect governments in the world. This needs to happen in different parts of the worldin equatorial, tropical, subtropical, and temperate regions. We want to reduce it to this level of simplicity: they must know what are the five ecological things that must happen in their country and the two or three things that should never happen. If we do this, then ecology will become, if not the number one, at least the number two issue in election manifestos. Only when ecology becomes an election issue, will it result in government policy, and only then will there be large budgets allocated so that solutions manifest.

We owe it to our children to leave this land rich and fertile, with abundant water. As a generation of people have the responsibility and opportunity of restoring our severely-depleting ecology. Be part of it in whichever way you can.

## World Malaria Day: Renewing the Fight Against a Global Health Threat

THE KOVAI HERALD
DK.Abirami

World Malaria Day is observed every year on April 25 to raise awareness about one of the world's most serious mosquito-borne diseases and to promote global efforts aimed at its prevention and elimination. The day serves as an important reminder of the need for continued investment, public awareness, and collective action in the fight against malaria.

Malaria is a life-threatening disease caused by parasites transmitted to humans through the bites of infected female Anopheles mosquitoes. The disease continues to affect millions of people worldwide, particularly in tropical and subtropical regions, including parts of Asia and Africa.

According to the World Health Organization, the 2026 theme for World Malaria Day is "Driven to End Malaria: Now We Can. Now We Must." The campaign highlights the urgent need to use existing medical advances, vaccines, treatments, and mosquito control tools to save lives and move toward a malaria-free future. Health experts stress that early diagnosis, timely treatment, and preventive measures such as mosquito nets, insect repellents, and maintaining clean surroundings are crucial in controlling the spread of the disease. Public health campaigns also focus on educating communities about eliminating stagnant water, which serves as breeding grounds for mosquitoes.

In recent years, significant progress has been made in reducing malaria cases and deaths globally. However, challenges such as climate change, drug resistance, and limited healthcare access in vulnerable regions continue to pose serious concerns.

The WHO notes that despite advances, malaria still caused hundreds of thousands of deaths globally in recent years, making awareness initiatives more important than ever. World Malaria Day also honours the efforts of healthcare workers, researchers, and volunteers who work tirelessly to protect communities from the disease. The observance calls upon governments, institutions, and citizens to join hands in strengthening prevention and ensuring that no life is lost to a preventable illness.

## Kongu Tourister Launches Coimbatore's First Exclusive Travel Accessories Showroom



Kongu Tourister, a new retail brand by Siva Trading House and JGG, has launched its exclusive showroom in Coimbatore.

The showroom was inaugurated by Rajesh P. Lund, President of the Indian Chamber of Commerce, who officially opened the store.

Headquartered in Coimbatore, the showroom is located at Saibaba Colony, NSR Road. The Directors of Kongu Tourister Natarajan, Govindakrishnan, Krishnakumar, and Mahadevan were present during the occasion.

# 10 Must-Visit Tourist Spots in Coimbatore This Summer


Barlikadu

THE KOVAI HERALD

With the summer heat intensifying day by day and schools declaring summer vacation, families are increasingly planning trips to cooler destinations. While hill stations such as Ooty and Kodaikanal continue to attract large crowds, Coimbatore district offers a range of scenic and spiritual destinations that are equally appealing during the holiday season.

Among the most popular places is Marudhamalai, one of Tamil Nadu's well-known Murugan temples, situated about 20 kilometres from the city railway station. Revered by devotees as the seventh abode of Lord Murugan, the hill temple draws a steady stream of visitors throughout the year.

Another major attraction is Velliangiri Hills, located around 30 kilometres from the city. Known for its dense forests and spiritual significance, the hills are a favoured destination for trekkers and pilgrims, especially during Chitra Pournami, when large numbers of devotees climb the seven hills to worship Lord Shiva.

Nature lovers are also flocking to Kovai Kutralam Falls, about 31 kilometres from the city. Surrounded by lush green forests, mist-covered hills, and cascading streams, the waterfall remains one of the most sought-after picnic spots during summer.

Siruvani, famed for having some of the tastiest drinking water in the world, is another must-visit location. Situated about 40 kilometres from Coimbatore near the Tamil Nadu-Kerala border, the area is known for its scenic reservoir, forest routes, and tranquil atmosphere.

For those travelling towards Valparai, Monkey Falls continues to be a favourite stop. Located about five kilometres from Azhiyar, the waterfall is popular among tourists, though visitors are advised to be cautious as monkeys are frequently seen in the area.

Wildlife enthusiasts often head to Top Slip, a forested tourist zone near Pollachi that serves as an important elephant habitat. The region also offers elephant rides and easy access to the nearby Parambikulam reserve.


The Azhiyar Dam, located near Pollachi, remains another crowd-puller. With boating facilities and a picturesque mountain backdrop, the dam attracts families and photography enthusiasts alike. Nearby, the Kadambarai Hydroelectric Project area offers breathtaking views of the hills and reservoir, making it an ideal destination for nature tourism. At Barlikadu near Pillur Dam, tourists can enjoy traditional coracle rides, especially during weekends. The location is also known for offering traditional local foods, adding to the travel experience.

Rounding off the list is Thirumoorthy Hills, near Udumalpet, which combines natural beauty with spiritual importance. The hill temple, boating facilities, and the nearby Panchalinga Falls make it a preferred summer destination for visitors from across the region.

With a mix of temples, waterfalls, dams, and hill landscapes, Coimbatore district continues to emerge as a prime summer holiday destination for travellers looking to beat the heat without venturing too far from the city.


Marudhamalai


Monkey Falls


Azhiyar Dam

# பழையூர் புற்றுக்கண் மாரியம்மன் கோயில் ஏப்ரல் 29-ல் குண்டம் விழா நடைபெறுகிறது





தி கோவை ஹெரால்டு

கோவை பாப்பநாயக்கன் பாளையம் பழையூரில் அமைந்துள்ள புற்றுக்கண் மாரியப்பன் கோயில் 44வது குண்டம் திருவிழா வரும் 29ம் தேதி நடைபெறுகிறது.

கோவை பாப்பநாயக்கன் பாளையம் பழையூர் பொன்னிநகரில் புற்றுக்கண் மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோயிலின் 44வது குண்டம் திருவிழாவை முன்னிட்டு கடந்த 14ம் தேதி பூக்கம்பம் நடப்பட்டது. தொடர்ந்து, ஒவ்வொரு நாளும் கோயில் வளாகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வரும் 28ம் தேதி ராஜராஜேஸ்வரி அலங்காரம், திருக்கல்யாண வைபவம் நடைபெறுகிறது.


இரவு 8.30 மணிக்கு தீகுண்டம் வைத்தல் நிகழ்ச்சி நடக்கிறது. பின்னர், 29ம் தேதி காலை 11 மணியளவில் குண்டம் இறங்குதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு குண்டம் இறங்குகின்றனர். மாலை 4 அணிக்கு மாவிளக்கு பூஜை, இரவு வான வேடிக்கை நடைபெறுகிறது. மே 1ம் தேதி காலை 10 மணி முதல் அன்னதானம் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை புற்றுக்கண் மாரியம்மன் கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.

## கோவையில் நெகிழ்ச்சி சம்பவம்

# டிரைவர்களுக்கு சொந்த கார் வழங்கிய தொழிலதிபர் பாலாஜி உத்தமராமசாமி





தி கோவை ஹெரால்டு

கோவையைசேர்ந்தவர் பாலாஜி உத்தமராமசாமி. இவர், கோவை மாவட்ட பாஜக முன்னாள் தலைவராக இருந்தவர்.

கோவையில் உத்தம் பவுண்டேஷன் என்ற பெயரில் பல்வேறு மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டு வருகிறார். சமீபத்தில் "சரணாலயம்" அறக்கட்டளைக்காக, ஆதரவற்றமற்றும்மனநலம் குறைபாடுள்ளவர்கள் பயன்பாட்டிற்காக ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டடத்தை கட்டி கொடுத்துள்ளார்.

இந்த நிலையில், தன்னிடத்தில் நீண்ட காலமாக பணி புரிந்து வந்த இரு டிரைவர்களுக்கு சொந்தமாக கார் வாங்கிக் கொடுத்து நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

இது குறித்து, பாலாஜி உத்தமராமசாமி கூறியதாவது, '' எனது மகனின் பிறந்தநாள் பரிசாக என்னிடம் நீண்டகாலமாக ஓட்டுநர்களாக பணிபுரிந்து என்னுடைய குடும்ப உறுப்பினர்களாகவே ஆகி விட்டவர்கள் எனது டிரைவர்கள். என்னையும் எனது குடும்பத்தையும் பார்த்துக் கொண்டு நேரம் காலம் பார்க்காமல் உழைத்து, எனது தொழிலையும் பார்த்துக்கொள்ளும் ராமச்சந்திரன் என்கிற ராசாவு மற்றும் விக்கி என்கிற தனபால் ஆகிய இருவருக்கும் என்னால் முடிந்த சிறிய பரிசாக கார் வாங்கிக்கொடுத்துள்ளேன்.

நானும் எனது மகனும் கடந்தமூன்றுமாதங்களுக்கு முன், காரில் சென்று கொண்டிருந்த போது, எனது மகன், அப்பா நாம் ஏன் அவர்கள் இருவருக்கும் கார் வாங்கி கொடுக்க கூடாது? என்று கேள்வி எழுப்பினான். உடனே, நான் சம்மதித்தேன். சில விஷயங்கள் பெரியவர்கள் நமக்குதோன்றாவிட்டாலும், குழந்தைகளின் சிந்தையில் உதிப்பதுதான் இதன் சிறப்பு' என்றார்.

# வேலை விட்டு நின்றாலும் பி.எப். பணத்திற்கு வட்டி தொடரும்




இந்தியாவில் வேலைக்கு செல்லும் கோடிக்கணக்கான மக்களின் ஓய்வுக்கால நிதி பாதுகாப்பை உறுதி செய்ய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் ஒவ்வொரு மாதமும் ஊழியரின் சம்பளத்தில் இருந்து ஒரு தொகை பிடித்தம் செய்யப்படுவதுடன், அவர் பணிபுரியும் நிறுவனமும் அதற்கான பங்குத் தொகையை அவரது பி.எப். கணக்கில் செலுத்துகிறது.

பலருக்கும் இருக்கும் முக்கியமான சந்தேகம், வேலையை விட்டு நின்ற பிறகும் பி.எப். கணக்கில் உள்ள பணத்திற்கு வட்டி கிடைக்குமா என்பதுதான்.

இதற்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு அளித்துள்ள விளக்கத்தின் படி, வேலை விட்டு விலகினாலும் கணக்கில் ஏற்கனவே இருக்கும் தொகைக்கு வட்டி தொடர்ந்து சேர்க்கப்படும். புதிய பண வரவு இல்லாவிட்டாலும், முன்பே சேர்க்கப்பட்ட தொகைக்கு ஆண்டுதோறும் வட்டி வழங்கப்படும்.

தற்போது இந்தத் திட்டத்திற்கு 8.25 சதவீத ஆண்டு வட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வட்டி கூட்டு வட்டி முறையில் கணக்கிடப்படுவதால், நீண்ட காலம் பணம் கணக்கில் இருந்தால் அது கணிசமாக உயர்ந்து நிற்கும்.

மேலும், ஒருவர் வேலை இழந்தாலும் அல்லது தனிப்பட்ட காரணங்களால் பணியை விட்டு நின்றாலும், 58 வயது வரை பி.எப். கணக்கில் உள்ள தொகைக்கு வட்டி தொடர்ந்துகிடைக்கும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

58 வயதை அடைந்த பிறகு தேவையெனில் அந்தத் தொகையை முழுமையாகப் பெறலாம். அதற்கு முன்பும், மீண்டும் வேலைக்கு செல்லாத சூழலில் விதிமுறைகளின்படி விண்ணப்பித்து தொகையைப் பெறும் வசதியும் உள்ளது.

இதனால், வேலை இல்லாத காலத்திலும் பி.எப். சேமிப்பு தொகை பாதுகாப்பாக வளர்ந்து, ஓய்வுக்காலத்தில் பெரிய நிதி ஆதரவாக அமையும் என்று நிதி வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

# அவிநாசியில் 100 சதவிகிதம் வெற்றி

## எல். முருகன் நம்பிக்கை



பழநியில், முருகன் கோவிலுக்கு தரிசனம் செய்ய, மத்திய இணை அமைச்சரும் அவிநாசி தொகுதி பா.ஜ., வேட்பாளருமான எல். முருகன் வந்தார். இவரது வாகனம்,தேர்தல்விதிமுறை காரணமாக, கிரி வீதியில் அனுமதிக்கப்படவில்லை. இதனால், பேட்டரி பஸ் வாயிலாக, ரோப் கார் இயக்கும் இடத்துக்கு சென்று, அங்கிருந்து ரோப் காரில், பழநி கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.

பின், அடிவாரம் வந்த அவர் கூறுகையில், 'ஜனநாயக முறையில் அமைதியாக தேர்தல் நடந்துள்ளது. தேர்தல் ஆணையம் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவது அவர்களின் தோல்வி பயத்தை காட்டுகிறது. அவிநாசி தொகுதியில், 100 சதவீதம் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. அங்கு ஒரு லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற இருக்கிறோம். எங்கள் வெற்றி, தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். தி.மு.க., அரசின் மீது மக்களுக்கு உள்ள கோபத்தின் வெளிப்பாடு தான், இந்த தேர்தலில் 'விறுவிறு' என அதிகளவில் ஓட்டுப்பதிவு நடந்துள்ளது. தி.மு.க., அரசை அகற்றவே மக்கள் ஓட்டளித்துள்ளனர். பா.ஜ., மீது மக்கள் நம்பிக்கைவைத்துள்ளனர். பா.ஜ.,வின் வளர்ச்சிவேகம் சிறப்பாக உள்ளது. தி.மு.க., அரசின் செயல்பாடு ஜீரோ தான். இவ்வாறு கூறினார்.

# ஜனநாயகன் படத்தின் எடிட்டர் மீது நடவடிக்கை

## உண்மை காரணம் என்ன?




நடிகரும் அரசியல் வாதியுமான விஜய்யின் கடைசிப்படமான 'ஜனநாயகன்' படத்தின் எடிட்டர் பிரதீப் இ. ராகவ், இணையத்தில் படத்தின் காட்சிகள் கசிந்த வழக்கு தொடர்பாக தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தென்னிந்திய திரைப்படப் படத்தொகுப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

படத்தின் சில காட்சிகள் இணையத்தில் கசிந்ததற்கு ராகவ் நேரடியாகப் பொறுப்பல்ல என்று படத்தொகுப்பாளர்கள் சங்கம் கூறியிருந்த போதிலும்,இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக எடிட்டர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,"ஜனநாயகன் உட்பட, தான் பணியாற்றிய அனைத்துப் படங்களிலும் சங்கத்தில் உறுப்பினர் அல்லாதவர்களை உதவியாளர்களாகப்பணியமர்த்தியதன் மூலம் ராகவ் சங்கத்தின் விதிகளைமீறியுள்ளார்.

இந்தச் செயல் சங்கத்தின் விதிகளுக்கு எதிரானது. அவரது, அலட்சியத்தால்தான் கசிவு நிகழ்ந்ததாக ராகவ் ஒப்புக்கொண்டுள்ளர். இந்த நிலை தொடர்ந்தால், திரைப்படத் துறையே முடங்கிவிடும் அபாயமுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் நடப்பதைத் தடுப்பது தென்னிந்திய திரைப்படப் படத்தொகுப்பாளர்கள் சங்கத்தின் கடமையாகும் என்று '' தெரிவித்துள்ளது.

இதுபோன்ற படத்தின் காட்சிகள் பலமுறை நிகழ்ந்திருந்தாலும், ஒரு திரைப்படத்தின் படக்குழுவினர் மீது எடிட்ட சங்கம் நேரடியாகத் நடவடிக்கை எடுப்பது இதுவே முதல் முறையாகும். எச். வினோத் இயக்கத்தில் தயாரான 'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு தணிக்கைச் சான்றிதழ் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, படம் வெளியாவது தள்ளி போனது. தேர்தலுக்கு இரு வாரத்துக்கு முன்பாக ,ஜனநாயகன் படத்தின் முழு காட்சிகளும் இணையத்தில் வெளியானது. இதையடுத்து , ஒரு எடிட்டர் உள்ளிட்ட 9 பேர் கைதுசெய்யப்பட்டனர். இது தொடர்பாக, ஏப்ரல் 17 ம் தேதி எடிட்டர் சங்கம் சார்பில் அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது, ராகவின் இடைநீக்கம் குறித்து ஒருமித்த கருத்து எட்டப்பட்டது.




கோவை மாவட்டத்தில் மேற்கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணியில், 6.50 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். அதன் காரணமாகவே, இத்தேர்தலில் ஓட்டுப்பதிவு சதவீதம் உயர்ந்திருக்கிறது. 2021ல் நடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில், தற்போது 2.22 லட்சம் ஓட்டுகளே கூடுதலாக பதிவாகியுள்ளன.

கோவை மாவட்டத்தில் முந்தைய வாக்காளர் பட்டியலில் 32 லட்சத்து 25 ஆயிரத்து198 வாக்காளர்கள் இருந்தனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணி மேற்கொண்ட போது இரட்டை பதிவு, முகவரி மாறிச் சென்றவர்கள், இறந்த வாக்காளர்கள் என, 6 லட்சத்து 50 ஆயிரத்து 590 பேர் நீக்கப்பட்டனர். இதன்பின் வெளியிட்ட வரைவு பட்டியலில், 25 லட்சத்து 74 ஆயிரத்து 608 வாக்காளர்கள் இருந்தனர். தேர்தலில் போட்டியிட்டவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன், வாக்காளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டது. அதன்படி, 27 லட்சத்து 44 ஆயிரத்து472 வாக்காளர்கள் இருந்தனர். இவர்களில், 23 லட்சத்து 25 ஆயிரத்து 011 வாக்காளர்கள் ஓட்டளித்திருக்கின்றனர். இது, 84.72 சதவீதம். 2021 தேர்தலில் 21 லட்சத்து 2 ஆயிரத்து 540 ஓட்டுகள் பதிவாகியிருந்தன. அதனுடன் தற்போது பதிவான ஓட்டுகளை ஒப்பிடுகையில், 2 லட்சத்து 22 ஆயிரத்து 471 ஓட்டுகளே அதிகமாக பதிவாகியுள்ளன.

# ஸ்ரீசாந்தை அடித்த சம்பவம்; ரூ.1 கோடி சம்பாதித்த ஹர்பஜன்



கடந்த 2008ம் ஆண்டு ஐ.பி.எல் தொடரின் முதல் சீசனில், மும்பை இந்தியன்ஸ் மற்றும் பஞ்சாப் அணிகள் மோதிய ஆட்டத்தின் போது, ஸ்ரீசாந்தை ஹர்பஜன் சிங் முகத்தில் அடித்தார்.

ஸ்ரீசாந்த் முகத்தை பொத்திக் கொண்டு அழுதார். இந்த சம்பவம் ஐ.பி.எல் தொடரின் மோசமான ஒரு சம்பவமாக பார்க்கப்பட்டது.

எனினும், இருவரும் விரைவில் சமாதானமாகிவிட்டனர், ஆனால், தற்போது அந்த இரு வீரர்களுக்கும் இடையிலான உறவு மீண்டும் மோசமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சமீபத்தில், ஸ்ரீசாந்த், ஹர்பஜனை கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார். அவர் கூறியுள்ளதாவது, '' அந்த சர்ச்சைக்குரிய சம்பவத்தை மையமாக வைத்து சமீபத்திய விளம்பரம் ஒன்றின் மூலம் ஹர்பஜன் 1 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளார். அவரை மன்னித்துவிட்டேன்.

ஆனால், இந்த சம்பவத்தை வணிகமயமாக்கும் செயல் ஏற்புடையது அல்ல. நகைச்சுவையாக பயன்படுத்தி அந்த விளம்பரத்தில் ஹர்பஜன் நடித்துள்ளார்.

அதோடு, அந்த வீடியோவைத் எனது இன்ஸ்டாகிராமில் பகிரும்படியும் ஹர்பஜன் கேட்டுக் கொண்டார்.

நான் எந்தப் பேட்டியிலும் அவரைப் பற்றிப் பேசியதில்லை. இதுவே முதல் முறையாக இருக்கப் போகிறது.

சமீப காலம் வரை எந்தப் பிரச்சினையும் இல்லை. அந்த விளம்பரைத்தை எனது இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட கேட்ட போது, அவரிடம், 'நான் மன்னிப்பேன், ஆனால் ஒருபோதும் மறக்க மாட்டேன்' என்று சொன்னேன். யாராவது உங்களை அவமதித்தால், நீங்கள் அவர்களை மன்னித்து விடலாம். ஆனால், ஒருபோதும் மறக்கக்கூடாது. நீங்கள் மறந்தால், அவர்கள் மீண்டும் அதே தவறைச் செய்வார்கள். அதற்கு ஹர்பஜனே மிகப்பெரிய உதாரணம். அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஹர்பஜனை இன்ஸ்டா பக்கத்தில் பிளாக்கும் செய்து விட்டேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 30 குழந்தைகளை காப்பாற்றி உயிர்நீத்த தெருநாய்க்கு கிராம மக்கள் இறுதிச் சடங்கு



ஒடிசா மாநிலத்தின் மயூர்பஞ்ச் மாவட்டத்தில், பள்ளி குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற தனது உயிரையே தியாகம் செய்த தெருநாய்க்கு கிராம மக்கள் இணைந்து இறுதிச் சடங்கு நடத்திய சம்பவம் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மயூர்பஞ்ச் மாவட்டத்தின் தீர்குலா கிராமத்தில் உள்ள மழலையர் பள்ளி வளாகத்தில் இந்த சம்பவம் நடைபெற்றது. பள்ளி வளாகத்தில் சுமார் 30 குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு விஷப்பாம்பு உள்ளே நுழைந்ததாக கூறப்படுகிறது.

அந்த நேரத்தில் அங்கு இருந்த "காளி" என்ற பெயருடைய தெருநாய், குழந்தைகளின் அருகே பாம்பு செல்லாமல் தடுக்க அதனுடன் கடுமையாக போராடியது.

கிராம மக்கள் கூறுகையில், குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக காளி பாம்புடன் தீவிரமாக சண்டையிட்டதாக தெரிவித்தனர்.

போராட்டத்தின் போது காளியின் முகம் மற்றும் வாய் உள்ளிட்ட பல இடங்களில் பாம்பு கடித்திருந்தாலும், அது பாம்பை கொல்லும் வரை விடாமல் எதிர்த்து போராடியது.

இறுதியில் பாம்பு உயிரிழந்ததுடன், சில நிமிடங்களிலேயே விஷக்கடி காரணமாக காளியும் உயிரிழந்தது.

சுமார் 30 குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றிய இந்த தெருநாயின் தியாகத்தை பாராட்டும் வகையில், கிராம மக்கள் அனைவரும் இணைந்து அதற்கு இறுதிச் சடங்கு நடத்தினர்.

இந்த சம்பவம் கிராமம் முழுவதும் மட்டுமின்றி சுற்றுவட்டார பகுதிகளிலும் பெரும் நெகிழ்ச்சியையும் பாராட்டையும் ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றிய காளியின் தியாகம் அனைவரின் மனதையும் உருக்கியுள்ளது.

# பெண் அரசியல்வாதிகள் ஆண் தலைவர்களின் அறைக்குள்... பப்பு யாதவ் கருத்தால் சர்ச்சை

'இந்தியாவில் பெரும்பாலான பெண் அரசியல்வாதிகள் அரசியல் தலைவர்கள ஆண்களுக்குப் பாலியல் ரீதியான சலுகைகளை வழங்காமல் அரசியலில் நுழைய முடியாது' என்று சுயேச்சை எம்.பி. பப்பு யாதவ் தெரிவித்த கருத்தால் சர்ச்சை வெடித்துள்ளது.

இதுகுறித்து பப்பு யாதவ் பேசியதாக வீடியோ ஒன்று வலம் வருகிறது. அதில், அவர் கூறியிருப்பதாவது, "இந்தியாவில் பெண்கள் தெய்வங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் இந்த நாட்டில் ஒருபோதும் மதிக்கப்பட மாட்டார்கள். 90% பெண் அரசியல்வாதிகள் ஆண் தலைவர்களின் அறைக்குள் நுழையாமல் தங்களது அரசியல் வாழ்க்கையைத் தொடங்க முடியாது" என்று கூறியிருந்தார்.

பப்பு யாதவின் இந்த கருத்தால் சர்ச்சை வெடித்தது. தொடர்ந்து, பீகார் மாநில மகளிர் ஆணையம் அவருக்கு நோட்டீஸ் அனுப்பியது.

காங்கிரஸ் கட்சி செய்தித் தொடர்பாளர் ஷாமா முகமது, "பப்பு யாதவை ஒரு மூன்றாம் தர எம்.பி. எங்கள் கட்சி அவருக்கு ஆதரவளிக்காது. நாங்கள் இன்று இருக்கும் நிலையை அடைய எங்களில் பலர் கடுமையாக உழைத்துள்ளோம்.



பெண்களுக்கு எதிரான இந்த இழிவான மற்றும் தரக்குறைவான கருத்துக்களுக்காக பப்பு யாதவ் உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும்," என்று கூறியுள்ளார்.

பாஜக செய்தித் தொடர்பாளர் ஷெசாத் பூனாவாலா, நான் ஒரு பெண், என்னால் போராட முடியும் என்று கூறும் பிரியங்கா காந்தி போன்றவர்கள், பப்பு யாதவ் கருத்து குறித்து மவுனம் காப்பார்கள்" என்று கண்டித்துள்ளார்.

மக்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறத் தவறிய பிறகு, பப்பு யாதவ் இந்த கருத்தை தெரிவித்திருந்தார். மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவுக்கு ஆதரவாக 298 வாக்குகளும், எதிராக 230 வாக்குகளும் பதிவானது.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதை நோக்கமாக கொண்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்தத்தை எதிர்க்கட்சிகள் சீர்குலைப் பதாகஎன்டிஏ குற்றம்சாட்டிய போதிலும், அண்மைக் காலத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அரசின் ஒரு முக்கிய முன்மொழிவைத் தடுத்த ஒரு அரிய நிகழ்வாக இது பார்க்கப்பட்டது.

சுயேச்சை எம்.பி.யான யாதவ், காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியில் உள்ளார். பப்பு யாதவின் கருத்து இந்திய அரசியலில் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஆண் ஆதிக்கத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

# புதிய சர்ச்சை : நடிகை சாய் பல்லவியின் தாய் மொழி என்ன?

நடிகை சாய் பல்லவி, தற்போது பாலிவுட்டில் ரன்பீர் கபூருக்கு ஜோடியாக 'ராமாயணம்' படத்தில் சீதை வேடத்தில் நடித்து வருகிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் மலையாளி அல்ல என்று அவர் சொன்ன விவகாரம் குறித்த சர்ச்சை இப்போது மீண்டும் தலை தூக்கியுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், ஒரு செய்தியாளர், "நீங்கள் மலையாளிதானே... பின்னர் எப்படி இவ்வளவு அழகாகத் தெலுங்கு பேசுகிறீர்கள்?" என்று கேட்டார். சாய் பல்லவியோ, "நான் மலையாளி அல்ல, நான் ஒரு தமிழ்ப் பெண்" என்று குறிப்பிட்டிருந்தார். தற்போது, சிலர் இந்த வீடியோவைத் தவறாகச் சித்தரித்து, "தன்னை மலையாளி என்று அழைத்ததற்காக சாய் பல்லவி கோபமடைந்தார்" எனப் பொய்யான செய்திகளைப் பரப்புகின்றனர். இது, மலையாள ரசிகர்களிடத்தில் சாய் பல்லவி மீது தவறான எண்ணத்தை விதைத்தது. ஏனென்றால், சாய்



பல்லவியை திரையுலகுக்கு அறிமுகப்படுத்தியதே 'பிரேமம்' என்ற மலையாளப் படம்தான்.

சமீபத்திய பேட்டி ஒன்றில் இந்தச் சம்பவம் குறித்துப் பேசிய சாய் பல்லவி, "நான் சொல்லாத விஷயங்களைச் சொன்னதாக என் மீது குற்றம் சுமத்தினர். இது, எனக்கு மிகுந்த மனவலியை ஏற்படுத்தியது. நான் கோவையில் பிறந்து வளர்ந்தவள். எனது பூர்வீகம் மற்றும் தாய்மொழி தமிழ் என்பதை மட்டுமே நான் அங்கு குறிப்பிட்டேன். மற்ற மொழிகளையோ அல்லது பிற மொழி மக்களையோ குறைத்து மதிப்பிடும் எண்ணம் எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை" என்று தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள மூதூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சாய் பல்லவி. கோவை அவிலா கன்வென்டில் படித்தவர். படகா சமூகத்தைச் சேர்ந்த அவரின் தாய் மொழி படகாஸ். தமிழ்-கன்னடம் சேர்ந்து உருவான மொழி இது. இதற்கு, எழுத்து வடிவம் கிடையாது. தமிழ்தான் இந்த மொழிக்கு எழுத்து வடிவம். உதகை, குன்னூர், கோத்தகிரி பகுதியில் சுமார் 5 லட்சம் மக்கள் இந்த மொழியை பேசுகிறார்கள்.

# சிவபதம் அடைந்த வாயிலார் நாயனார் பக்தியின் உன்னத வடிவம்



பண்டைய தொண்டை நாட்டின் திருமயிலாப்பூரில் வேளாளர் மரபில் அவதரித்த வாயிலார் நாயனார், சிவபக்தியின் உன்னதச் சின்னமாக போற்றப்படுகிறார். சிறுவயதிலிருந்தே கபாலீஸ்வரர் கோயில் இறைவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு அன்பும் ஆழ்ந்த பக்தியும் செலுத்தி வழிபட்டு வந்தார்.

திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி நாயனார் "தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்" என்று குறிப்பிட்டிருப்பதால், இவர் 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என அறியப்படுகிறது. இவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் மிகக் குறைவாகக் கிடைத்தாலும், அவருடைய பக்தி மரபு இன்றளவும் பெருமையுடன் பேசப்படுகிறது.

இறைவழிபாட்டில் புறவழிபாடும் அகவழிபாடும் என இரு வகைகள் உள்ளன. கோயில் சென்று வழிபடுதல், தீபம் ஏற்றுதல், கோயிலைத் தூய்மை செய்தல் போன்றவை புறவழிபாடாகக் கருதப்படுகின்றன. ஆனால், இறைவனை மனதினுள் அமர்த்தி தியானம் செய்து வழிபடுவது அகவழிபாடாகும். இந்த அகவழிபாட்டின் சிறந்த முன்மாதிரியாக வாயிலார் நாயனார் விளங்கியதாக சைவ மரபு குறிப்பிடுகிறது.

வாயிலார் நாயனார் வெளிப்படையாக எதையும் பேசாமல், மௌன விரதம் பூண்டு சிவபூஜையில் முழுமையாக ஈடுபட்டதால் "வாயிலார்" என அழைக்கப்பட்டார். அவர் தம் மனதினுள் கோயில் ஒன்றை உருவாக்கி, அதில் சிவபெருமானை அமர்த்தி, ஞானம் என்னும் திருவிளக்கை ஏற்றி, ஆனந்தம் என்னும் திருமஞ்சனம் செய்து, அன்பு என்னும் நைவேத்தியத்தை சமர்ப்பித்து மானசீக பூஜையை மேற்கொண்டார்.

சேக்கிழார் இதனை "மறவாமையால் அமைத்த மனக் கோயில்" என்று வர்ணித்துள்ளார். தம் மனக்கோயிலிலேயே இறைவனை நிலைநிறுத்தி வழிபட்ட அவர், இறுதியில் சிவபெருமானின் அருளால் சிவபதத்தை அடைந்து பேரின்ப நிலையை பெற்றதாக சைவ சித்தாந்த மரபு போற்றுகிறது.

பக்தி என்பது வெளிப்படையான சடங்குகளைத் தாண்டி மனத்தின் தூய்மையிலும் அன்பிலும் நிலைபெற வேண்டும் என்பதை வாயிலார் நாயனாரின் வாழ்க்கை இன்றும் உணர்த்துகிறது.

# வாட்ஸ்அப்பில் நேரடி மொபைல் ரீசார்ஜ் வசதி அறிமுகம்

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களால் பயன்படுத்தப்படும் வாட்ஸ்அப் செயலி, இந்தியப் பயனர்களுக்காக புதிய மொபைல் ரீசார்ஜ் வசதியை அறிமுகம் செய்துள்ளது.

இனி பயனர்கள் தங்கள் கைபேசி எண்களுக்கு ரீசார்ஜ் செய்ய வேறு செயலிகளைத் தேடி செல்ல வேண்டிய அவசியமின்றி, நேரடியாக வாட்ஸ்அப் மூலமாகவே இந்தச் சேவையைப் பயன்படுத்த முடியும்.

இந்த புதிய வசதி ஒரு முன்னணி பணப் பரிவர்த்தனை நிறுவனத்துடன் இணைந்து அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஜியோ, ஏர்டெல் மற்றும் வி.ஐ. வாடிக்கையாளர்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாட்ஸ்அப் முகப்புத் திரையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள ரூபாய் சின்னம் மூலம் நேரடியாக பணம் செலுத்தும் மற்றும் ரீசார்ஜ் பகுதிக்குச் செல்ல முடியும்.

அங்கு பயனர்கள் தங்கள் கைபேசி எண் மற்றும் நெட்வொர்க் சேவையைத் தேர்வு செய்து, கிடைக்கும் பல்வேறு திட்டங்களில் தேவையானதை எளிதாகத்





தேர்ந்தெடுக்கலாம்.

மேலும், உடனடி வங்கி பரிவர்த்தனை, பற்று அட்டை, கடன் அட்டை போன்ற பல்வேறு கட்டண முறைகள் மூலம் உடனடியாக பணம் செலுத்தி ரீசார்ஜ் செய்து கொள்ளும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மின்சார கட்டணம் செலுத்துதல் மற்றும் மெட்ரோ ரயில் பயணச்சீட்டு பதிவு போன்ற வசதிகள் வாட்ஸ்அப்பில் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ரீசார்ஜ் வசதியும் சேர்க்கப்பட்டிருப்பது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தகவல் பரிமாற்றம் முதல் பணப்பரிவர்த்தனை வரை அனைத்தையும் ஒரே செயலிக்குள் முடிக்கலாம் என்பதால், தொழில்நுட்ப உலகில் இது ஒரு முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

# அனைவரின் கவனத்தையும் ஈர்த்த கிரிக்கெட் வீரர் வீரேந்தர் சேவாக் சொகுசு பங்களா





முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் வீரேந்தர் சேவாக் டெல்லியில் கட்டியுள்ள சுமார் ரூ.130 கோடி மதிப்பிலான பிரமாண்ட சொகுசு பங்களா அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றிருந்தாலும், இந்திய கிரிக்கெட் வரலாற்றின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக சேவாக் இன்றளவும் மதிக்கப்படுகிறார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டு முறை முச்சதம் அடித்த ஒரே இந்திய வீரர் என்ற பெருமை அவருக்கே சொந்தம். மேலும், 2007 இருபது ஓவர் உலகக் கோப்பை மற்றும் 2011 ஒருநாள் உலகக் கோப்பை வெற்றிகளில் இந்திய அணிக்காக அவர் முக்கிய பங்காற்றியுள்ளார்.

கிரிக்கெட் துறையில் அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்புக்காக பத்ஸ்ரீ விருதும், 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த சர்வதேச டெஸ்ட் வீரர் விருதும் வழங்கப்பட்டுள்ளன.

சாதாரண பின்னணியில் இருந்து உயர்ந்த சேவாக், தற்போது தெற்கு டெல்லியின் ஹவுஸ் காஸ் பகுதியில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். அவர் கட்டியுள்ள இந்த பிரமாண்ட பங்களாவிற்கு தனது தாயின் நினைவாக "கிருஷ்ணா நிவாஸ்" என பெயரிட்டுள்ளார்.

பெரும் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த வீடு எளிமையும் நவீன வசதிகளும் இணைந்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அழகிய மர வேலைப்பாடுகள், மிதமான வண்ண அலங்காரம் மற்றும் இதமான விளக்குகள் ஆகியவை வீட்டின் அழகை மேலும் உயர்த்துகின்றன.

குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சுமார் 13 அறைகள் கொண்டதாக இந்த வீடு கட்டப்பட்டுள்ளது. மேலும், ஆன்மிக நம்பிக்கை கொண்ட சேவாக், தினசரி வழிபாடுகளுக்காக வீட்டுக்குள் தனி கோயில் அமைத்துள்ளார்.

தனது கிரிக்கெட் வாழ்க்கையில் வென்ற கோப்பைகள், விருதுகள் மற்றும் நினைவுப் பொருட்களை பாதுகாக்கவும் காட்சிப்படுத்தவும் தனி அருங்காட்சியக அறையும் பங்களாவில் அமைக்கப்பட்டுள்ளது.

பங்களாவை சுற்றியுள்ள விரிவான தோட்டம் பார்ப்போரை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தோட்டத்திலேயே தனது இரண்டு மகன்களுக்கும் கிரிக்கெட் பயிற்சிகளை சேவாக் வழங்கி வருவதாக கூறப்படுகிறது.

செல்லப்பிராணிகள் மீது தனி விருப்பம் கொண்ட அவர், தனது வளர்ப்பு நாய்கள் விளையாடுவதற்காக தனி புல்வெளிப் பகுதியையும் ஒதுக்கியுள்ளார்.

இந்த பிரமாண்ட பங்களா தற்போது சமூக வலைதளங்களிலும் கிரிக்கெட் ரசிகர்களிடையிலும் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.

# பட்டாசு விபத்தில் 13 பேர் பலி... திருச்சூர் பூரம் விழா நடக்குமா?

உலகப் புகழ்பெற்ற திருச்சூர் பூரம் திருவிழா இந்த ஆண்டு நடத்தப்படுமா? என்கிற கேள்வி எழுந்துள்ளது.

கேரள மாநிலம் திருச்சூர் அருகேயுள்ள முண்டத்திக்கோட்டில் பட்டாசு ஆலையில் நேற்று நிகழ்ந்த பட்டாசு விபத்தில் 13 பேர் பலியாகினர். 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். திருச்சூர் பூரம் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் வான வேடிக்கை நிகழ்ச்சிக்காக பட்டாசு தயாரிப்பில் ஈடுபட்ட போது, இந்த விபத்து நடந்துள்ளது. திருச்சூர் பூரம் திருவிழா, பரமேக்காவு பகவதி கோயில் மற்றும் திருவாம்பாடி ஸ்ரீ கிருஷ்ணா கோயில் என இரண்டு கோயில் நிர்வாகத்தால் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகிறது. 200 ஆண்டுகளாக இந்த பூரம் விழா நடப்பது வழக்கமாக உள்ளது .




இந்த ஆண்டுக்கான விழா வரும் 26ம் தேதி நடைபெறவிருந்தது. திருச்சூர் வடக்குநாதர் கோயில் வளாகத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள். 50க்கும் மேற்பட்ட யானைகளும் பங்கேற்கும். இதை, முன்னிட்டு பிரமாண்டமாக வான வேடிக்கையும் நடைபெறும். இதற்காக திருச்சூர் நகரத்திலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவிலுள்ள முண்டத்திக்கோட்டில், திருவாம்பாடி பட்டாசு ஆலையில்தான் இந்த விபத்து நடந்தது.

விபத்தையடுத்து, இந்த முறை திருச்சூர் பூரம் நிகழ்ச்சியின் போது, வாண வேடிக்கைகள் இருக்காது இந்த ஆண்டு விழாக்களை எவ்வாறு நடத்துவது என்பது குறித்த அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தயாராக இருப்பதாகவும் கோயில் நிர்வாகங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கேரள அரசு தேவசம் போர்டு தரப்பில் ஒரு அவசர கூட்டம் நடத்தப்படவுள்ளது. அமைச்சர் வி.என். வாசவன் தலைமையில் நடக்கவுள்ள இந்த கூட்டத்தில், திருச்சூர் பூரம் விழாவை எப்படி நடத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கப்படவுள்ளது

இந்த ஆண்டு பூரம் விழா நடைபெற்றாலும், அது கோலாகலமான கொண்டாட்டமில்லாமல் அமைதியாக நடத்தப்பட வாய்ப்புள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

# விஜய் கோட்டை விட்ட வாய்ப்புகள்... இலவு காத்த கிளி!

திி கோவை ஹெரால்டு



தேர்தல் முடிந்து ரிசல்ட்டில்தோற்றுவிட்டால், விஜய் என்ன செய்வார்? என்கிற கேள்விதான் பலர் மனதில் எழுந்துள்ளது.

ஏனென்றால், வேறு எந்த தேர்தலையும் அவர் எதிர்கொள்ளவில்லை. அப்படி தேர்தலை சந்தித்திருந்தால் கூட மக்களின்மனநிலைஅறிந்து ,செயல்பட்டுகொண்டிருக்க முடியும். ஸ்ட்ரெயிட்டா முதலமைச்சர்தான் என்கிற ரீதியில் அவர், இந்தசட்டமன்றதேர்தலை எதிர்ண்டார். அவரது தொண்டர்களோ 100 சதவிகிதம் வெற்றிதான் என்கிற மனநிலையில் உள்ளனர். ஒருவேளை, தவெகதோற்றால்,பலரும் விபரீதமான முடிவை எடுக்கலாம். எனவே, ‘இப்போதேஉங்கள்வீட்டில் விஜய் ரசிகர் இருந்தால், பெற்றோர் அவர்களை ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளுங்கள்’ என்று பலரும் அறிவுரை கூற தொடங்கியுள்ளனர்.

விஜய் இந்த தேர்தலில் தோற்றால், அடுத்து 5 வருடங்களுக்குகாத்திருக்க வேண்டும்.இந்தசமயத்தில் அவரின் கட்சியின் உள்கட்டமைப்புபணிகளை செய்யலாம். ஆனால், விஜய்க்கு அதற்கெல்லாம் நேரமிருக்காது. அவரால் முழு நேரமாக அரசியலில் செயல்பட முடியாது. எனவே, படங்களில் நடிக்க வாய்ப்புள்ளதாகதெரிகிறது. பெரம்பூர், திருச்சிஎன இரு தொகுதிகளில் போட்டி யிடுகிறார் விஜய். வெற்றி பெற்று, சட்டமன்றத்துக்கு சென்றால், பல விஷயங்களை விஜய் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். அப்படி, சட்டமன்றபணிகளை மேற்கொண்டு , தனது தொகுதி மக்களுக்கு நல்ல விஷயங்களைசெய்து கொண்டிருந்தால் கூட, அடுத்த 5 ஆண்டுகளில் மீண்டும் விஜய்க்கு ஒரு வாய்ப்பு கிடைக்கலாம்.

இந்த தேர்தலில் விஜய் தோற்றால் கூட, கட்சியின் வளர்ச்சி அடுத்த 5 ஆண்டுகளில் விஜயின் நடத்தையை சார்ந்துதான் இருக்கும்.

நடிகர் விஜயகாந்த் சந்தித்த முதல் தேர்தலில் விருதாசலத்தில் அவர் மட்டும்தான் வெற்றி பெற்றார். தெய்வத்துடனும் மக்களுனும்தான் கூட்டணி என்றவர் தமிழக அரசியலின் நிலையை அறிந்து, பின்னர், 2011ம் ஆண்டு அதிமுகவுடன் கூட்டணி அமைத்து 29 எம்.எல்.ஏக்களை பெற்ற, எதிர்க்கட்சித் தலைவராக உயர்ந்தார்.

தமிழகத்தை பொறுத்தவரை, கூட்டணி கட்சிகள் வலுவாக இருந்தால்தான், சட்டமன்ற தேர்தலில் வெற்றி வாய்ப்பு உண்டு. இதை, கருத்தில் கொண்டுதான் அதிமுக , பாஜக போன்ற கட்சிகள் விஜயை கூட்டணிக்குள் கொண்டு வர முயன்றன. ஆனால், விஜய் நான்தான் முதல்வர் என்கிற முடிவில், உறுதியாக நின்றதால் எடப்பாடிபழனிசாமி பின்வாங்கினார். ஒரு கட்டத்தில் விஜய் கூட்டணிக்குள் வேண்டவே வேண்டாம் என்கிற முடிவுக்கு எடப்பாடி வந்து விட்டதாகவும் சொல் கிறார்கள். அதிமுகவுடன் விஜய் கூட்டணி சேர்ந்திருந்தால் நிச்சயம் என்.டி.ஏ கூட்டணி வெற்றி பெற்றிருக்கும் . விஜய் துணை முதல்வராக இருந்து ஐந்து ஆண்டுகள் ஆட்சியை நடத்துவது எப்படி? அரசு அதிகாரிகளை கையாள்வது எப்படி ?என்று அரசு நிர்வாகத்தையும் படித்திருக்கலாம்.

அரசியலிலும் சில நுணுக்கங்களிலும் தேர்ச்சிபெற்றிருக்கலாம். ஆனால், தனக்கு கிடைத்த அனைத்து வாய்ப்புகளையும் அவர் கோட்டை விட்டு விட்டார். தோல்வியடைந்தாலும் விஜய்தொடர்ந்து, அரசியல் களத்தில் பயணித்தால், மட்டுமே பிற்காலத்தில் வெற்றி சாத்தியமாகும். தோல்வியை கண்டு துவண்டுவிட்டால், அவரது அரசியல் வாழ்க்கையும் துவண்டு விடும்.

இதற்கிடையே, விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சி ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். அதில், “தமிழ் மக்களுக்கு, தமிழ்நாட்டிற்கு இன்னும் சில நாட்களில் ஒரு மாற்றத்துக் கான ஒரு நாள் வரப்போகிறது. அது உண்மையான ஒரு மாற்றம். அதற்காகப் பல பேர் இயங்கிக் கொண்டிருக் கிறார்கள். அந்த இயக்கத்திற்கு ஊக்கம் கொடுப்பதற்காக, தமிழ்நாட்டின் எதிர் காலத்திற்காக உழைக்கக் கூடிய, போராடக்கூடிய ஒரு இளைஞன் வருகிறார்.

எத்தனையோ தடைகள், எல்லாவற்றையும் தாண்டி வந்துகொண்டிருக்கிறார். ஒரு தொண்டனாக உங்களுக்குத் தலைமை ஏற்கவந்திருக்கிறார். இந்தத் தேர்தல், வழக்கமாக ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடக்கின்ற தேர்தலாக மட்டும்பார்க்காதீர்கள். இது ஒரு மாற்றம், ஒரு எழுச்சி, ஒரு மௌனப் புரட்சி.

அந்தப் புரட்சி மௌனமாக, கத்தியின்றி, ரத்தமின்றி ஒரு புரட்சி. ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நடக்க வேண்டும் என்று பலருடைய கனவு. அந்த மாற்றம் நடக்க வேண்டும் என்றால், உங்களுக்குள்ளேஒருவிரல் புரட்சி நடக்க வேண்டும். அந்த ஒரு விரல் ‘விசில்’ என்று தெரிவித்துள்ளார்.

## விஜய் தாக்கமா? கண்டுகொள்ளாத சென்னை!

**இந்த தேர்தலில் சென்னையில் வாக்குப்பதிவு 83.7 சதவீதமாக பதிவாகியுள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால், மக்கள் சாரை சாரையாக வந்து வாக்களித்தது போல தோன்றுகிறது. ஆனால், அது உண்மையல்ல . வாக்காளர்கள் பெருமளவில் திரண்டு ஓடடளிக்கவில்லை. அது வெகுவாக குறைந்துள்ளது. முந்தைய இரண்டு தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், 2026-ல் உண்மையில் குறைவானவர்களே வாக்களித்துள்ளனர்.**

**புள்ளிவிவரங்களைப் பார்த்தால் சென்னை நகரத்தில் 23,69,493 வாக்குகள் பதிவாகியுள்ளது. இது 83.7 சதவீதம் ஆகும். ஆனால், உண்மையில், 2021-ல் வாக்களித்த 24,16,815 வாக்காளர்களுடன் ஒப்பிடும்போது, 47,322 வாக்காளர்கள் குறைந்துள்ளனர். அதே வேளையில், 2016 மற்றும் 2021-க்கு இடையில், மொத்த வாக்காளர் பங்கேற்பு 17,100 என்ற மிகச்சிறிய சரிவேயே இருந்தது. ஆனால், 2026ல் இது அதிகரித்துள்ளது. சென்னையில் திரு.வி.க நகரில் 7,000 வாக்காளர்கள் கணிசமாக அதிகரித்துள்ளனர். கொளத்தூரில் 5,000 வாக்குகளும், வேளச்சேரியில் 2,000 வாக்குகளும் அதிகரித்துள்ளன. இதற்கு நேர்மாறாக, வட சென்னையின் நட்சத்திரத் தொகுதிகளில் ஒன்றான ஆர்.கே. நகரில், 2021-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10,000 வாக்காளர்கள் குறைவாக வாக்குப்பதிவு செய்துள்ளனர். மறைந்த தலித் தலைவர் கே. ஆம்ஸ்ட்ராங்கின் மனைவி பொற்கொடி ஆம்ஸ்ட்ராங், அதிமுக கூட்டணி சார்பில் இங்கு போட்டியிடுகிறார். ஆதவ் அர்ஜுனா போட்டியிடும் தொகுதியான வில்லிவாக்கத்தில் 7,000 வாக்காளர்கள் குறைந்துள்ளனர். விஜய் போட்டியிடும் பெரம்பூர் தொகுதியில், கடந்த தேர்தலைப் போலவே கிட்டத்தட்ட அதே அளவிலான வாக்குப்பதிவு பதிவாகியுள்ளது. பெரிய அளவில் மாற்றம் ஏதும் இல்லை. சேப்பாக்கம் மற்றும் ராயபுரம் தொகுதிகளில் முறையே 1,000 மற்றும் 3,000 வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர். எனவே, விஜய் அரசியலுக்கு வந்ததால், மக்கள் திரண்டு வந்து வாக்கு செலுத்தியதாக சொல்லப்படுவது ஏற்புடையதல்ல என்றும் இளைஞர்கள் திரண்டு வந்து வாக்கு செலுத்தியதற்கு வேண்டுமானால் , அவர் காரணமாக இருக்கலாம் என்றும் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.**

# பிரிட்டனில் புகை பிடிக்காத சமுதாயத்தை உருவாக்க புது முயற்சி... அது என்ன?




பிரிட்டனில் புகை பிடிக்காத சமுதாயத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த 2009ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதிக்குப்பிறகுபிறந்தசிறார் களுக்கு சிகரெட் விற்பனை செய்யப்பட மாட்டாது.

இங்கிலாந்து நாடாளு மன்றத்தின் இரு அவை யிலும் அதற்கான மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின்படி, தற்போது 17 மற்றும் அதற்கு கீழே உள்ள வயதுடைய யாரும் வாழ்நாளுக்கும் சிகரெட் வாங்க முடியாது.

பிரிட்டன்சுகாதாரர்துறை செயலர் வெஸ்ட் ஸ்ட்ரீட்டிங் கூறுகையில், “வருங்கால தலைமுறையை புகையின் பிடியில் இருந்து காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்ட வரலாற்று முடிவு இது. இளம் தலைமுறையினரை புகைக்கு அடிமையாவதை தடுக்கவும், அவர்களின் உடல் நலனை பாதுகாக்கவும் இந்த நடவடிக்கைஉதவிக்கரமாக இருக்கும் ”என்றார்.

பிரிட்டனின் மன்னரின் ஒப்புதலை பெற்ற பிறகு இது சட்டமாகும். அதற்கு பிறகு குழந்தைகள் விளையாட்டு மைதானம், பள்ளி, மருத்துவமனை அருகிலும் புகைபிடிப்பது தடைசெய்யப்படும். கடந்த ஜூன் மாதத்திலேயே சிறார்களை புகைக்க ஆசையை தூண்டும் இ-சிகெரட்டுக்கு முற்றிலும் தடைவிதிக்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில் சிகரெட் பிடிப்பதால் ஆண்டுக்கு 75 ஆயிரம்பேர் இறக்கின்றனர். அதாவது, ஒரு ஆண்டில் நடக்கும் இறப்புகளில் 25 சதகிவிதம்புகைபிடிப்பதால் நடக்கிறது. எனவே, புகை பிடிப்பதை தடை செய்ய வேண்டுமென்று பரவலாக கோரிக்கை எழுந்து கொண்டிருந்தது. தற்போது, அது சட்டமாக்கப்பட்டுள்ளது.

உலகில்முதன்முதலில் இளையதலைமுறைக்கு சிகரெட் விற்பனையை நியூசிலாந்துதடைசெய்தது. கடந்த 2008ம் ஆண்டுக்கு பிறகு பிறந்தவர்களுக்கு இந்த நாட்டில் சிகரெட் விற்பனை செய்யப்பட மாட்டாது.

மாலத்தீவு நாட்டில் 2007ம் ஆண்டுக்கு பிறகு பிறந்தவர்கள் சிகரெட் வாங்க முடியாது. இப்படி, பல நாடுகளில் சட்டங்கள் உள்ளன. இந்தியாவிலும் இது போன்ற சட்டத்தை இயற்றுவது அவசியம் என்றே தோன்றுகிறது.

## ‘ரத்தம் கொடுங்கள்; பலருக்கு மறுவாழ்வு கிடைக்கும்’

# காற்று மாசால் மக்கள் தவிப்பு
# சிக்கலில் தமிழகத்தின் சிமெண்ட் நகரம்



தமிழ்நாட்டின்சிமெண்ட் நகரம்என அழைக்கப்படும் அரியலூர்மாவட்டத்தின்பல பகுதிகளில்சுண்ணாம்புபடி வங்கள் காணப்படுவதால் இங்கு பல சிமெண்ட் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தேவையான சுண்ணாம்பு கற்கள் இங்குள்ள விவசாய நிலங்களை குறைந்த விலைக்கு வாங்கி சுரங்கங் கள் தோண்டி கற்களை எடுக்கின்றனர். இதன்மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டாலும் இத்தகைய சுரங்கங்களால் காற்று, நீர், மண் மற்றும் சுகாதாரம், விவசாயம் இழப்புகளை எதிர்கொள்வதால் இப்பகுதி கிராம மக்கள் பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர்.

அரியலூரில் உள்ள சிமெண்ட்தொழிற்சாலைகள் கோடிக் கணக்கில் லாபம் அடைந்துவிட்டு இந்தப் பகுதி மக்களுக்கான சாலை, மருத்துவம், குடிநீர், கல்விக் கூடங்களுக்கான எந்த வசதியையும் செய்து தரவில்லை சுண்ணாம்பு சுரங்கத்திற்காகநிலங்களை கொடுத்தவிவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படவில்லை. ஏறக்குறைய 50,000 ஏக்கர் நிலத்தில் அரியலூர் மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. 150 அடி ஆழம் அளவுக்கு வெட்டி எடுப்பதால் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்படுகிறது.

சுரங்கங்கள் மற்றும் ஆலைகளில் இருந்துவரும் தூசுகாற்றைமாசுபடுத்துவ தோடு இப்பகுதியில் மக்காச்சோளம், வெங்காயம் உள்ளிட்ட விவசாய பயிர்கள் மீது படிந்து ஒளிச்சேர்க்கை அளவை தடுக்கிறது. இதனால்மகசூல்வெகுவாக வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். இங்கு, பசுமை பரப்பு 30% வரை குறைந்து வெப்ப அளவு 9% வரை அதிகரித்து உள்ளது.

தூசு மற்றும் கனிமங்கள் நீரில் கலந்து அதன் கடினத்தன்மை அதிகரிப்பதால் இதனை பயன்படுத்துவோருக்கு வயிறு, நுரையிரல், சிறுநீரகம், தோல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் பாதிப்பு அடையும் நிலை உள்ளது. மண்வளம் பாதிக்கப்படுகிறது. தூசுகளால் ஏற்படும் மாசை தவிர்க்க ESP / Bag House/ Fog cannons/ Wet Seppression/ ZLD / Green Belt உள்ளிட்ட தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என சுற்றுசூழல் சட்டங்கள் சொல்கிறது. இருப்பினும் அதனை கடைபிடிக்காததோடு பல நிறுவனங்கள் EC (Environmental Clearance) இல்லாமல் நடத்தப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தூசும், மாசும் தவிர்க்க இயலாமல் மக்களை பாடாய் படுத்துகின்றன.

கடந்த 1993 ம் ஆண்டு புதுப்பாளையம் உள்ளிட்ட 5 கிராமங்களில் சுமார் 1400 ஏக்கர் நிலம் சுண்ணாம்பு சுரங்கத்திற்கு என அரசே கையகப்படுத்தி உள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ 25 ஆயிரம் மட்டுமே வழங்கியுள்ளது.

இதனால், பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீட்டிற்காக நீதிமன்றம் செல்லும் நிலை உருவானது. உரிய இழப்பீடு பெற முடியாமல் தங்கள் நிலத்தையும், வாழ்வாதாரத்தையும் இழந்து பல விவசாயிகள் இங்குதவித்துவருகின்றனர். இவர்களுக்கான இழப்பீடு வழங்கிய பின்னரே, புதிய சுரங்க அனுமதி வழங்க வேண்டும் என்ற இவர்களது கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுவருகிறது.

கைவிடப்பட்ட நிலையில் உள்ள பல்வேறு சுரங்கங்கள் பல ஆண்டுகாலமாக மூடப்படாத நிலையில் உள்ளன. இவை, மக்களுக்கும் கால்நடைகளுக்கும் ஆபத்தாக மாறியுள்ளன.

300 அடிக்கும் அதிகமாக ஆழமாக உள்ள இச்சுரங்கங்களால் இப்பகுதியில் மண் அரிப்பு, நிலநடுக்கம் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, இதனை நீர்நிலைகளாக மாற்றினால் பலன் அளிக்கும்.

ஆனால் நிறுவனங்கள் இதற்கான பணிகளை செயல்படுத்தாததால் பாலைவனம் போல பள்ளதாக்குகளாய் காட்சி அளிக்கின்றன.

எனவே அரியலூர் மற்றும் பெரம்பலூர் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 15 லட்சம் மக்கள் நலன்கருதிவிவசாயிகளின் பாதிப்புகளுக்கு தீர்வு ஏற்படவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளவும், சட்டவிரோதமாக செயல் படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.




# விண்வெளிக்கு செல்லும் பாகிஸ்தான் வீரர்கள்

தி கோவை ஹெரால்டு

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இரு விண்வெளி வீரர்கள் சீன ஸ்பேஸ் மையத்துக்கு பயணம் செய்யும் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

விண்வெளியில் சர்வதேச விண்வெளி மையம்தவிர, சீனாதனியாக டியாங்காங் என்ற பெயரில் விண்வெளி மையத்தை அமைத்துள்ளது. பூமியின் சுற்றுவட்ட பாதையில் 450 கி.மீ தொலைவில் இது, சுற்றி வருகிறது. கடந்த 2022ம் ஆண்டு முதல் இந்த மையம் செயல்பட்டு வகிறது. இது, சீன தேசிய விண்வெளி நிர்வாகத்தால் இயக்கப்படுகிறது. இந்த மையத்தில் 3 விண்வெளி வீரர்கள் தங்கி, 6 மாதங்கள் வரை ஆய்வுசெய்கிறார்கள் . அதிகபட்சமாக 6 பேர் வரை தங்கலாம். 6 மாதத்துக்கு ஒரு முறை விண்வெளிவீரர்கள்மாற்றப் படுவார்கள். தற்போது, இந்த மையத்துக்குத்தான் முகமதுஜீஷான்அலிமற்றும் குர்ரம் தாவூத் ஆகிய இரு பாகிஸ்தான் பைலட்டுகள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள், இருவரும் பாகிஸ்தான் விமானப்படையில் விமானிகளாகப்பணியாற்றி வருகின்றனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் விண்வெளிக்குச் செல்வது இதுவே முதன்முறை. இதற்காக, சீன விண்வெளி மையத்தில் பயிற்சியைத் தொடங்குவதற்காக விரைவில் சீனாவுக்கு செல்லவுள்ளனர். இவர்களில் இருந்து ஒருவர், தியாங்காங் விண்வெளி மையத்துக்கு பயணம் செய்ய தேர்வு செய்யப்படுவார். இதன் மூலம், இந்தமையத்துக்குச் சென்ற முதல் வெளிநாட்டு விண்வெளி வீரர் என்ற வரலாற்றுச் சாதனை படைக்கப்படும்.

பாகிஸ்தானிய விண்வெளி வீரர்களின் தேர்வை சீனாவின் விண்வெளித் திட்ட வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வாக பார்க்கப்படுகிறது.சீனதனது விண்வெளி முயற்சிகளை சர்வதேசமயமாக்கவும், தொழில்நுட்ப சாதனைகளை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும்விருப்பத்தையும் காட்டுகிறது.

சிறப்பான கல்விப் பின்னணி , உடல் வலிமை கொண்டவர்கள், அனுபவம் வாய்ந்த விமானிகள், விண்வெளித் துறைகளில் முனைவர் பட்டம் பெற்றவர்கள். ஜீஷான் அலி மற்றும் தாவூத் ஆகியோர் சீனாவில் தங்கள் பயிற்சியின் போது "மாற்று விண்வெளி வீரர்களாக" பயிற்சி பெறுவார்கள். பயிற்சியின் போது, தியாங்காங் சர்வதேச விண்வெளி நிலையத்தின் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஷென்சோ விண்கலத்தை பற்றி முழு பயிற்சியை பெறுவார்கள்.

சர்வதேச விண்வெளி மையத்தில் அமெரிக்கா விதித்த கட்டுப்பாடுகளால், சீனாதனக்கென்றுதனியாக விண்வெளிய மையத்தை அமைத்துள்ளது.




# ஸ்ரீ ஆனந்தாஸ் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

## ஈரோட்டில் தனது முதல் கிளையை துவங்கியுள்ளது




தி கோவை ஹெரால்டு

தமிழ்நாட்டின் புகழ் பெற்ற இனிப்பு மற்றும் காரவகைகள் நிறுவனமான ஸ்ரீ ஆனந்தாஸ் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ், ஈரோட்டில்பழைய பாளையம் பெருந்துறை மெயின் ரோடு தொடங்கி யுள்ளது.

புதிய கிளை துவக்கம் குறித்து ஆனந்தாஸ் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மணிகண்டன் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்த புதிய கிளையின் தொடக்கம் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாக அமைந்துள்ளது. விரைவில் மற்றும் மதுரை மற்றும் பல நகரங்களிலும் புதிய கிளைகள் தொடங்கப்பட உள்ளன.

மேலும், பாலக்காடு கிளையின் வெற்றியைத் தொடர்ந்து, கேரள மாநிலத்தின் கொச்சியிலும் விரிவாக்கம் மேற்கொள்ளப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கேஎம்சிஹெச் மருத்துவமனையில் ஏஎம்டிஇசி 2026 இரு நாள் கருத்தரங்கு

தி கோவை ஹெரால்டு



கோவையில் உலகத் தரமான மருத்துவ சேவைகளை வழங்கி வரும் கேஎம்சிஹெச் மருத்துவமனை, தனது அவசரகால மருத்துவத் துறைசார்பில் "அவசரகால சூழ்நிலைகளில் காயங்களுக்கான தீவிர சிகிச்சை" என்றதலைப்பில் ஏஎம்டிஇசி2026 எனும் இரு நாள் கருத்தரங்கு மற்றும் நேரடி பயிற்சி வகுப்பை தொடங்கியது.

மருத்துவமனை வளாகத்தில் ஏப்ரல் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி, விபத்து மற்றும் காயங்களுக்கு உடனடி, ஆதாரபூர்வமான சிகிச்சை வழங்குவதன் அவசியத்தைவலியுறுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கருத்தரங்கை கேஎம்சிஹெச் மருத்துவமனை தலைவர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது, "சிறந்த மருத்துவ வசதிகள் மற்றும் திறமையான மருத்துவர்களுடன், மேற்கு தமிழகத்தில் விபத்துக்கால சிகிச்சையில் கேஎம்சிஹெச் முதல்நிலை மையமாகத் திகழ்கிறது," என்று அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் வெற்றிகரமான ஏற்பாட்டிற்கு மருத்துவ இயக்குநர் டாக்டர் ஏ.என். முருகன், அவசரகால மருத்துவத் துறையைச் சேர்ந்த ஏற்பாட்டாளர்கள் டாக்டர் கே. திலீபன் மற்றும் டாக்டர் கே. தாரகராம் ஆகியோரை, செயல் இயக்குநர் டாக்டர் அருண் பழனிசாமி பாராட்டினார்.

இந்த கருத்தரங்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து 300-க்கும் மேற்பட்ட முன்னணி நிபுணர்கள், ஆலோசகர்கள், முதுகலை மாணவர்கள் மற்றும் அவசர சிகிச்சை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

# ஐஸ்வர்யாவுடன் காதல் மலர்ந்தது எப்படி? - மனம் திறந்த அபிஷேக்



சமீபத்தில், ஐஸ்வர்யா மற்றும் அபிஷேக் தம்பதியினர் தங்களது 19வது திருமண நாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர் . இந்தத் தருணத்தில் ஐஸ்வர்யா தனது கணவர் மற்றும் மகளுடன் இருக்கும் புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துநெகிழ்ந்திருந்தார். இருவரும் மணிரத்னம் இயக்கத்தில் வெளி வந்த 'குரு' என்ற படத்தில் நடித்த போதுதான், காதலில் விழுந்ததாக பாலிவுட் உலகம் நம்பிக் கொண்டுள்ளது. ஆனால், தங்களுக்குள் காதல் மலர்ந்தது எப்படி என்பது குறித்து அபிஷேக் பச்சன் விரிவாக பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில், அவர் கூறியிருப்பதாவது:

"2000ம் ஆண்டு வாக்கில் தை அக்ஷர் பிரேம் கா 'என்ற படத்தில் நடித்த போதுதான் முதன் முதலில் ஐஸ்வர்யாவை நான் சந்தித்தேன். 2006ம் ஆண்டு ஜே.பி. தத்தா இயக்கத்தில் 'உம்ராஜான்' என்ற படத்தில் இருவரும் இணைந்து நடித்தோம். அந்தப் படத்தின் படப்பிடிப்பின் போதுதான், எங்களுக்குள் நட்பை தாண்டிய ஓர் உணர்வு தோன்றியது. படப்பிடிப்பின் ஷெட்யூல்கள், நீண்ட நேரமாக இணைந்து பணியாற்றியது, ஒரே செட்டில் இருந்தது போன்றவை எங்களுக்குள் நெருக்கத்தை உருவாக்கியது. இதுபோன்ற அனுபவம் எங்களுக்கு மற்ற படப்பிடிப்பில் கிடைக்கவில்லை. இந்தக் காலக்கட்டத்தில்தான் எங்களுக்குள் காதலும் உருவானது.

2007ம் ஆண்டு மணிரத்னம் இயக்கத்தில் 'குரு 'என்ற படத்தில் நடித்தோம். மணி ரத்னம் எங்கள் இருவருக்குமே காட்ஃபாதர் போன்றவர். எங்கள் இருவரின் சினிமா வாழ்க்கையில் முக்கியப் பங்காற்றியவர். இந்தப் படத்தில் நடித்த போது, எங்களுக்குள் உறவு இன்னும் வளர்ந்து, வலுப் பெற்றது. இந்தப் படத்தின் பிரீமியர் ஷோ நியுயார்க் நகரில் நடைபெற்றபோதுதான் , நான் ஐஸ்வர்யாவிடம் என் காதலைத் தெரிவித்தேன். அவரும் ஏற்றுக் கொள்ள எங்கள் காதல், நீண்ட கால கமிட்மெண்டுக்குத் தயாரானது. இரு குடும்பத்தினரும் எங்கள் காதலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். பின்னர், அதே ஆண்டில் திருமணம் செய்து கொண்டோம்.

19 வருட கால பந்தம் இது. ஐஸ்வர்யா எனக்கு மனைவி; எனது மகளுக்கு தாயார் என்பதுமட்டுமல்ல. எனது ஆத்மார்த்தமான துணையும் ஆவார். இன்று எனது மகளை உரிய மரியாதையுடன் வளர்த்து ஆளாக்கிய பெருமை ஐஸ்வர்யாவையே சேரும்" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

# கோவையில் எலவே டைமண்ட்ஸ் ஃபிளாக்ஷிப் ஷோரூம் துவக்கம்



தி கோவை ஹெரால்டு

கோவை ஆர்.எஸ். புரத்தில், 125 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட டிபாருமல் ஜுவல்லர்ஸின் பிரீமியம் நகைபிராண்டான எலவே டைமண்ட்ஸ் தனது தமிழ்நாட்டில் தனது முதல் ஃபிளாக்ஷிப் ஷோரூமை தொடங்கியுள்ளது.

ஹெல்த் பேஸிக்ஸ் நிறுவன நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்வாதி ரோஹித் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஷோரூமை திறந்து வைத்தார். நிறுவனர் திரிஷங்க் குப்தா, தலைமை நிர்வாக அதிகாரி பிரஜய் மங்கன்லால், கோயம்புத்தூர் ஃபிரான்சைசை சக்தி ஃபைனான்ஸ் சர்வீசஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஸ்ருதி பாலசுப்ரமணியம் மற்றும் உரிமையாளர் சந்திர பிரகாஷ் பன்சால் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

# வசிஷ்ட நதிக்கு மேட்டூர் அணை உபரி நீரை இணைக்க விவசாயிகள் கோரிக்கை



சேலம் அருகேயுள்ள கல்வராயன் மலைப் பகுதியில்இருந்துஉருவாகி ஆத்தூர், தலைவாசல், காட்டுக்கோட்டை, தேவியாக்குறிச்சி போன்ற பகுதிகளை கடந்து சுமார் 90 கி.மீ பயணித்து வங்ககடலில் சங்கமிக்கும் வசிஷ்ட நதி வரலாற்று சிறப்புமிக்கதாகும். சப்தரிஷிகளில் ஒருவரும் ராமபிரானின் குருவுமான வசிஷ்ட முனிவர் இந்த நதிக்கரையில் தவம் இருந்ததால் அவர் பெயரிலேயே இது, அழைக்கப்படுகிறது. ஆத்தூர், தலைவாசல், அரங்கலூரில் பகுதியில் இந்த ஆற்றில் தடுப்பணைகள் உள்ளன. சுமார் 12 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் இந்த ஆற்றினை நம்பியுள்ளன. ஏராளமானகிராமங்களுக்கு நீர் ஆதாரமாகவும் இந்த நதி உள்ளது. எனினும், நமது நாட்டில் மாசடைந்த 351 நதிகளில் முதலிடத்தில் வசிஷ்ட நதி உள்ளதாக மத்திய மாசுகட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

தொழிற்சாலை கழிவுகள், கழிவுநீர், கட்டுமான இடிபாடுகள், உணவு மற்றும் இறைச்சி கழிவுகள் இங்கு கொட்டப்படுவதால் இந்தநதி குப்பைகிடங்காக மாறிப் போனது. குறிப்பாக மணிவிழுந்தான் முதல் தியாகனூர் வரையிலான 10 கி.மீ தூரத்தில் இந்நதி மிகவும் மாசடைந்துள்ளது.

வசிஷ்ட நதியின் முக்கிய நீர்பிடிப்பு பகுதியான கல்வராயன் மலையில் கருமந்துரை அருகே கைக்கான் வளைவு என்ற ஓடையில் ஏற்பட்ட தடை காரணமாக நீர்வரத்து பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, வசிஷ்ட நதி நீர்வரத்தின்றி வறண்டு காணப்படுகிறது. இதனால் இதனை நம்பியுள்ள விவசாயிகளும், கிராம மக்களும் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். இதனை தவிர்க்கும் வகையில் மேட்டூர் அணை உபரிநீரைவசிஷ்டநதியுடன் இணைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

# பேடிஎம் பேமெண்ட்ஸ்: வங்கியின் உரிமம் ரத்து ரிசர்வ் வங்கியின் அதிரடி நடவடிக்கை

இந்திய ரிசர்வ் வங்கி, வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949-ன் கீழ் விதிமுறைகளைதொடர்ந்து மீறியதற்காக பேடிஎம் பேமெண்ட்ஸ் வங்கியின் வங்கி உரிமத்தை உடனடி அமலுக்கு வரும் வகையில் ரத்து செய்துள்ளது. இந்த நடவடிக்கை வைப்புதாரர்களின் நலனுக்கு எதிராக செயல்பட்டது, நிர்வாக குறைபாடுகள் மற்றும் விதிமீறல்கள் போன்ற காரணங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, இனிமேல் பேடிஎம் பேமெண்ட்ஸ் வங்கி எந்தவிதமான வங்கிச் செயல்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது. புதியவைப்புத்தொகைகள், கிரெடிட் பரிவர்த்தனைகள் மற்றும் வங்கி சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், வாடிக்கையாளர்கள் ஏற்கனவே கணக்கில் உள்ள பணத்தை திரும்பப் பெறுவதற்கு எந்தத் தடையும் இல்லை என ரிசர்வ் வங்கி உறுதியளித்துள்ளது. வங்கியில் போதிய அளவு நிதி கையிருப்பு இருப்பதால் அனைத்து வைப்புத் தொகைகளும் திருப்பிச் செலுத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், பேடிஎம் பேமெண்ட்ஸ் வங்கியை கலைப்பதற்கான விண்ணப்பத்தை மும்பை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளதாகவும் ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேடிஎம் பேமெண்ட்ஸ் வங்கி 2017 மே 23 முதல் செயல்பட்டு வந்தது. 2015 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியிடமிருந்து கொள்கை அளவிலான அனுமதிபெற்ற இந்த வங்கி, பின்னர் 2017 நவம்பர் 28 அன்று அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது.

தொடர்ச்சியான விதிமீறல்கள் மற்றும் கண்காணிப்பு குறைபாடுகள் காரணமாக, கடந்தசில ஆண்டுகளாகவே இந்த வங்கிக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. தற்போது உரிமம் முழுமையாக ரத்து செய்யப்பட்டிருப்பது நிதி துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், பேடிஎம் செயலியின் யுபிஐ பணப்பரிவர்த்தனை சேவைகள் தனியாக தொடர்ந்து இயங்கலாம்; பாதிப்பு முக்கியமாக பேமெண்ட்ஸ் வங்கி சேவைகளுக்கே என்று நிதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


# ஜனநாயக கடமையாற்றிய கோவை பிரபலங்கள்



கோவை தொண்டாமுத்தூர் தொகுதி சுகுணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, அவரது மனைவி வி.வித்யாதேவி வேலுமணி, மகன் வி. விஜய் விகாஷ், மருமகள் தீக்சனா, மகள் வந்தனா என்கிற சாரங்கி ஆகியோர் பொதுமக்களோடு வரிசையில் நின்று தங்களது வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை ஆற்றினர்.



கோவை செல்வபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தெற்கு தொகுதி வேட்பாளர் அம்மன் கே.அர்ச்சுணன், அவரது குடும்பத்தினர் வாக்களித்தனர்.



கோவை தொண்டாமுத்தூர் தொகுதி சுகுணாபுரம் மேற்கு அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நல்லறம் அறக்கட்டளை தலைவர் எஸ்.பி. அன்பரசன் மற்றும் மனைவி எஸ்.ஏ.ஹேமலதா, மகன்கள் ஏ.எல் விவேக், ஏ.எல்.விமல் ஆகியோர் தங்களது வாக்கினை செலுத்தினர்.



சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் கே.ஆர்.ஜெயராம், அவரது மனைவி கீதா, மகன் சக்தி ராம், சேரன் மாநகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் தனது குடும்பத்தினருடன் வாக்கினை பதிவு செய்தார்.




கோவை மாவட்ட ஆட்சியரும் மாவட்டத் தேர்தல் அதிகாரியுமான பவன்குமார் வாக்கினைப் பதிவு செய்தனர். பொதுமக்களுடன் இணைந்து சுமார் 15 நிமிடங்கள் வரிசையில் நின்று வாக்களித்த ஆட்சியர்.




அரோமா நிர்வாக இயக்குனர் பொன்னுசாமி, சுப்புலட்சுமி பொன்னுசாமி, தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.



**பி.ஆர்.ஜி. அருண்குமார்**
கவுண்டம்பாளையம் தொகுதி வேட்பாளர் வாக்கு பதிவு



கோவை வடக்கு தொகுதி வேட்பாளர் வானதி சீனிவாசன், தனது மகன் ஆதர்ஷ்–உடன் தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.



பிரிக்கால் நிறுவனர் விஜய் மோகன், தலைவர், சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன், தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.



**அண்ணாமலை**
பாஜக முன்னாள் தலைவர்



கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை தலைவர் நல்லா பழனிச்சாமி தனது வாக்கினை பதிவு செய்தார்.



பிருந்தாவன் வித்யாலயா பப்ளிக் பள்ளி நிர்வாக இயக்குனர் வசந்த ராஜன் குடும்பத்துடன் தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.



விஜடி வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன், விஜடி துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன் ஆகியோரும் வாக்களித்தனர்.



**கணபதி ராஜ்குமார்**
பாராளுமன்ற உறுப்பினர்



பார்க் கல்லூரி நிர்வாக இயக்குனர் டாக்டர் அனுஷா ரவி, தனது வாக்கினை பதிவு செய்தார்.



**செந்தமிழ்செல்வன்**
கோவை வடக்கு



**ந.கார்த்தி**
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்



**மயூரா ஜெயக்குமார்**
காங்.மா.இ.அணி செயலாளர்



**தளபதி முருகேசன்**
சூலூர்



முன்னாள் அமைச்சர் செ.மா.வேலுசாமி, மனைவி பானுமதி, மகன் சஞ்ஜீவி ஜெயதேவன் ஆகியோர் தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.

# வறண்டு போன பில்லூர் அணை... பரிதாபத்தில் பவானி ஆறு!

தி கோவை ஹெரால்டு



பில்லூர் அணையும், பவானி ஆறும், கோவை, திருப்பூர் மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாக உள்ளது. அணை மற்றும் பவானி ஆற்றில் இருந்து தினமும், 27 குடிநீர் திட்டங்களுக்கு, பல கோடி லிட்டர் நீர் எடுக்கப்படுகிறது. திருப்பூர், கோவை ஆகிய மாநகராட்சிகள், தொண்டாமுத்தூர், காரமடை, மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்படாத வகையில், பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, தண்ணீரை தேக்கி வைத்து, அதிலிருந்து குடிநீர் திட்டங்களுக்கு தண்ணீர் எடுக்கப்படுகிறது.

கடந்த மாதம், பில்லூர் அணையின் நீர்மட்டம் மிகவும் குறைந்ததால், பவானி ஆற்றில் தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது. இதனால், மேட்டுப்பாளையம் நகரில் இருந்து சிறுமுகை வரை பவானி ஆறு வறண்டு காணப்பட்டது. இந்த ஆற்றை நம்பி இருந்த, 16 குடிநீர் திட்டங்களுக்கு தண்ணீர் பம்பிங் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், இதை நம்பியுள்ள பல லட்சம் மக்கள், போதிய குடிநீர் கிடைக்காமல் அவதிப்பட்டனர். இதையடுத்து தமிழக அரசு, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அணைகளில் இருந்து குடிநீருக்கு பில்லூர் அணைக்கு நீர் திறந்து விட ஏற்பாடு செய்தது. மஞ்சூர் பகுதியில் உள்ள அணைகளில் இருந்து, பில்லூர் அணைக்கு குடிநீருக்கு நீர் திறந்து விடப்பட்டது. பில்லூர் அணையில் இருந்து பவானி ஆற்றில் நீர் திறந்து விட்டதால், கடந்த பத்து நாட்களாக ஆற்றில் நீரோட்டம் இருந்தது. தற்போது மஞ்சூர் பகுதியில் உள்ள அணைகளிலும் நீர் குறைந்ததால், பில்லூர் அணைக்கு திறந்து விடும் நீர் நிறுத்தப்பட்டது. பில்லூர் அணையில் இருந்தும், நீர் திடீரென நிறுத்தப்பட்டது. இதனால் நேற்று பவானி ஆற்றில் நீரோட்டம் இல்லாமல், மீண்டும் வறண்டு காணப்பட்டது.

உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்



உதிரத்தை உழைப்பாக்கி
உலகத்தை உயர்த்திடும்
உண்மை தொழிலாளியை
உள்ளத்தால் வணங்குவோம்
அனைவருக்கும் இனிய
உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்

LAKSHAKA TEX LLP

# இஸ்ரேல் பிரதமருக்கு புற்றுநோய்... சிகிச்சை என்ன?



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாவுக்கு புற்றுநோய் தாக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளையில், ஈரான் உச்சபட்சத் தலைவருக்கு செயற்கைகால் பொறுத்தப் படவுள்ளதாகவும் சொல்லப் படுகிறது.

இஸ்ரேல், அமெரிக்கா நாடுகள் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. முதல்கட்ட பேச்சுக்கு பிறகு, போரின் தீவிரம் குறைந்துள்ளது . இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளதாவது, "எனக்கு சிறுநீர்ப் பை புற்று நோய் இருந்தது , ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக ஜெருசலேமிலுள்ள ஹாடாஷா மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சமீபத்தில், ரேடியேஷன் சிகிச்சையும் பெற்றேன். இந்த பிராந்தியத்தில் நிலவிய போர் காரணமாக, எனது உடல் நிலை குறித்து வெளிப்படையாக அறிவிக்கவில்லை. தற்போது, முழுமையாக குணமடைந்துள்ளேன் . எனது பணிகளை நல்ல முறையில் பார்க்கிறேன். கடவுளுக்கு நன்றி " என்று தெரிவித்துள்ளார்.

ஹாடாசா மருத்துவ மனையின் புற்று நோய் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,"பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு ஆரம்ப நிலையே புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

முறையான சிகிச்சை செய்யப்பட்டு சிறிய கட்டி அகற்றப்பட்டுள்ளது. மீண்டும், அது வளருவதற் கான அறிகுறி தென்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுநீர் வெளியேறும் பாதையில் உள்ள கேன்சர் என்பது ஆண்களின் சிறுநீர்ப்பைக்குக் கீழேயுள்ள சிறிய சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் ஆகும். இது பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களை பாதிக்கிறது. சிறுநீர் கழிப்பதில் சிரமம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், மற்றும் விந்தணுவில் ரத்தம் காணப்படுவது போன்றவை இதன் முக்கிய அறிகுறிகளாகும். ஆரம்பத்தில் கண்டறிந்தால் 90 சதவிகிதம் குணப்படுத்தி விடலாம். இது, மிக மெதுவாகவே வளரும் தன்மை கொண்டது.

# ஈரான் உச்சபட்சத் தலைவருக்கு செயற்கை கால்... முகத்தில் பிளாஸ்டிக் சர்ஜரி!



ஈரானின் உச்சபட்சத் தலைவர் மோஜ்தபா சுயநினைக்கு திரும்பி விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. தனது தந்தை அயேதுல்லா கமேனி கொல்லப்பட்ட பிறகு பதவியேற்ற மோஜ்தபா கமெனி, படுகாயமடைந் துள்ளதாகவும், தலைமறைவாக இருந்து செயல்பட்டு வருவதாகவும் நியூயார்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது

ஆனால், அவரது கால் ஒன்றில் மூன்று முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது, செயற்கைக்கால் பொருத்த வேண்டிய நிலையில் அவர் உள்ளார். ஒரு கையிலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அவரது முகமும் உதடுகளும் கடுமையாகத் தீக்காயமடைந்துள்ளன, இதனால் அவருக்கு பேசுவது கடினமாக உள்ளது. மோஜ்தபாவுக்கு பிளாஸ்டிக் சர்ஜரி அறுவை சிகிச்சை தேவைப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

மோஜ்தபா கமெனி தலைமைப் பொறுப்பை ஏற்றதிலிருந்து பொது வெளியில் தென்படவில்லை. டி.வியிலும் தோன்றவில்லை.

பலவீனமாக இருக்கும் நிலையில் அவர் பொதுவெளியில் தோன்ற விரும்பவில்லை என்று சொல்கிறார்கள்.

அவருடன் தகவல் தொடர்பும் டிஜிட்டல் முறையில் இல்லை. மாறாக, உறையிலிடப்பட்ட கடிதங்கள் வழியாகவே உச்சபட்சத் தலைவருடன் மற்ற தலைவர்கள் தகவல் தொடர்பு கொள்கின்றனர். மோட்டார் சைக்கிள்களில் நம்பிக்கைக்குரிய ஈரான் புரட்சிப்படை வீரர்களே அந்த கடிதங்களை எடுத்து செல்கின்றனர். அவரிடத்தில், இருந்து எழுத்து வாயிலாக பதில் பெற்று முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

உயர்மட்ட அதிகாரிகள் கூட அவரிடமிருந்து விலகியே இருக்கிறார்கள். உச்சபட்சத்தலைவரின் மறைவிடத்தை இஸ்ரேல் கண்டுபிடித்து, விடலாம் என்கிற அச்சத்தில், மூத்த அரசு அதிகாரிகள் அவரைச் சந்திக்கச் செல்வதில்லை. போர் உள்ளிட்ட தேசியப் பாதுகாப்பு விவகாரங்களில், ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த தளபதிகளே கூட்டாக முடிவெடுக்கிறார்கள். இவர்களை இயக்கும் கருவியாக மட்டுமே மோஜ்தபா உள்ளார்.

கொல்லப்பட்ட அயேதுல்லா கமேனி காலத்தில் முடிவுகளை அவரே எடுத்து செயல்படுத்துவார். இப்போது, தளபதிகள் எடுக்கும் முடிவுக்கு மோஜ்தபா ஒப்புதல் மட்டுமே கொடுக்கிறார்.

ஈரான் புரட்சிப்படை தளபதிகளின் எழுச்சி ஈரானின் அரசியல் படிநிலையையும் மாற்றியமைத்துள்ளது. ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷெஷ்கியன் மற்றும் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி உள்ளிட்ட தலைவர்கள் போர் பற்றிய முடிவுகளை எடுப்பதில்லை. இவர்கள், பெரும்பாலும் உள்நாட்டு நிர்வாகத்தில் கவனம் செலுத்துகின்றனர்.

தொடர்ச்சியான அமெரிக்கக் கடற்படை முற்றுகைக்கு மத்தியில், ஈரான் ராணுவத் தளபதிகள் பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், அமெரிக்காவுடன் திட்டமிடப்பட்டிருந்த முதல் கட்டப் பேச்சுவார்த்தை முறிந்தது. அமெரிக்காவின் அழுத்தம் தீவிரமடைந்த நிலையில், பேச்சுவார்த்தையை தொடருவதா வேண்டாமா ? என்பது குறித்து ஈரானின் தலைமைக்குள் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இறுதியில், ஈரான் புரட்சிப்படைத் தளபதிகளின் முடிவே உறுதி செய்யப்பட்டது. தளபதிகளின் தீவிர எதிர்ப்பு காரணமாகவே அமெரிக்கா விதித்த நிபந்தனைகளுக்கு ஈரான் அடிபணியவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த மோதல் ஈரானில் "ஆட்சி மாற்றத்திற்கு" வழிவகுத்துள்ளது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார். ஈரானின் நிர்வாக அமைப்பு சற்று உருமாற்றம் அடைந்துள்ளது. அதிகாரம் மறைந்துவிடவில்லை. ஆனால், அது கைமாறியுள்ளது. ஒற்றைத் தலைமையில் இருந்து பலருக்கும் அதிகாரம் கைமாறியுள்ளது. தற்போதைக்கு, ஈரானின் உச்சபட்சத் தலைவர் பதவியில் உள்ளார். ஆனால் அவரைச் சுற்றியுள்ள அதிகார அமைப்பு மாறிவிட்டதாக அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.

# 2300 ஆண்டுகள் பழமையான எகிப்திய மம்மிகள் ஆய்வில் அதிர்ச்சி தகவல்கள்



சுமார் 2300 ஆண்டுகள் பழமையான எகிப்திய மம்மிகளை நவீன கணினி ஒளிக்கதிர் ஸ்கேன் மற்றும் முப்பரிமாணப் படவியல் தொழில்நுட்பம் மூலம் ஆய்வு செய்த விஞ்ஞானிகள் பல முக்கியமான தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

இந்த ஆய்வின் போது மம்மிகளின் மண்டை ஓட்டு அமைப்பு, எலும்புகளின் நிலை, அக்கால மனிதர்களைத் தாக்கியிருந்த நோய்களின் தடயங்கள் போன்ற பல முக்கியத் தரவுகள் கண்டறியப்பட்டுள்ளன. உடலை சேதப்படுத்தாமல் அதன் உள்புற அமைப்புகளைத் துல்லியமாகப் பார்ப்பதற்கு இந்த உயர்தர ஸ்கேன் தொழில்நுட்பம் பெரிதும் உதவியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ஒரு மம்மியை ஆய்வு செய்தபோது, அதன் காலில் கட்டை விரல் இல்லாமல் இருந்தது ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இது விபத்தால் ஏற்பட்ட சேதமா அல்லது அக்கால மருத்துவ சிகிச்சையின் ஒரு பகுதியாக அகற்றப்பட்டதா என்பது குறித்து தீவிரமான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், மம்மியாக்கம் செய்யப்பட்டவர்களின் உடல் நிலையில் இருந்த குறைபாடுகள் மற்றும் அவர்கள் வாழ்ந்த காலத்து மருத்துவ முறைகளை ஒப்பிட்டு ஆய்வு செய்ய இந்தத் தகவல்கள் முக்கிய பாலமாக இருக்கும் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பண்டைய எகிப்தியர்களின் வாழ்க்கை முறை, உடல்நலம் மற்றும் மருத்துவ அறிவு குறித்து மேலும் பல மறைக்கப்பட்ட தகவல்கள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோன்ற நவீன தொழில்நுட்ப ஆய்வுகளுக்கு மேலும் பல மம்மிகள் உட்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# 24 மணி நேரம் இனி 25 மணி நேரமாகுமா? விஞ்ஞானிகள் கணிப்பு




தி கோவை ஹெரால்டு

தற்போது ஒரு நாள் 24 மணி நேரமாக இருப்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், எதிர்காலத்தில் ஒரு நாள் 25 மணி நேரமாக மாறக்கூடும் என்று விண்வெளி விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். இந்த மாற்றம் உடனடியாக நடைபெறப்போவதில்லை; சுமார் 20 கோடி ஆண்டுகள் கழித்தே இது நிகழும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதற்குக் காரணமாக நிலவின் ஈர்ப்பு விசை குறிப்பிடப்படுகிறது. நிலவு பூமியின் கடல்களில் அலைகளை உருவாக்குவதால், பூமியின் சுழற்சி வேகம் மிக மெதுவாக குறைந்து வருகிறது. இதன் விளைவாக ஒவ்வொரு 100 ஆண்டுகளுக்கும் சுமார் 1.7 மில்லி விநாடி அளவுக்கு ஒரு நாள் நீளமாகி வருகிறது.

விஞ்ஞானிகளின் கணிப்புப்படி, இந்த மெல்லிய மாற்றம் தொடர்ந்தால், சுமார் 20 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் 25 மணி நேரம் ஆகும் நிலை உருவாகலாம். இது மனிதர்களின் தற்போதைய வாழ்க்கையில் எந்த உடனடி தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், பூமி உருவான ஆரம்பகாலத்தில் ஒரு நாள் 10 முதல் 18 மணி நேரம் வரை மட்டுமே இருந்ததாகவும், டைனோசர் வாழ்ந்த காலத்தில் அது சுமார் 23 மணி நேரமாக இருந்ததாகவும் பண்டைய பவளப் பாறைகள் மற்றும் புவியியல் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. பின்னர் அது படிப்படியாக 24 மணி நேரமாக மாறியுள்ளது.

எனவே, "இனி நாளை முதல் 25 மணி நேரம்" என்றல்ல, கோடிக்கணக்கான ஆண்டுகள் கழித்து பூமியின் நாள் நீளம் ஒரு மணி நேரம் அதிகரிக்கலாம் என்பதே விஞ்ஞானிகளின் விளக்கம் ஆகும். இது பூமி நிலவு உறவின் நீண்டகால இயற்கை மாற்றமாக பார்க்கப்படுகிறது.

# சாதி இல்லையடி பார்த்திபன்



நடிகர் பார்த்திபனுக்கு 'சாதி, மதமற்றவர்' என்ற சான்றிதழை ஒரு வாரத்திற்குள் வழங்க வேண்டும் எனச் சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹைதராபாத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய நடிகர் பார்த்திபன், தன்னை ஒரு குறிப்பிட்ட சாதி மற்றும் மொழியைச் சார்ந்தவராக அடையாளப்படுத்திக் கொண்டார். அவரது இந்தப் பேச்சுக்குச் சமூக வலைதளங்களில் கடும் கண்டனம் எழுந்தது. இதனைத் தொடர்ந்து, "நான் திட்டமிட்டு அப்படிப் பேசவில்லை; வாய் தவறி வந்த வார்த்தைகள்" என அவர் விளக்கம் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து பார்த்திபன் கடந்த 1958-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் தேதி பிறந்த தனக்குப் பிறப்புச் சான்றிதழ் இல்லை. மேலும் பழைய எஸ்.எஸ்.எல்.சி படிப்பை முடித்த பின்னர் முறையான சான்றிதழ்களைப் பெறவில்லை. இதனால் தனது சாதி, மதத்தைத் தெரிவிக்கும் பிறப்புச் சான்றோ அல்லது கல்விச் சான்றோ தற்போது தன்னிடம் இல்லை.

சாதி, மதம் மற்றும் மொழி அடிப்படையிலான பிளவுகள் தேச ஒற்றுமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டி, 'சாதி, மதமற்றவர்' எனச் சான்றிதழ் கோரி வேளச்சேரி வட்டாட்சியரிடம் விண்ணப்பித்தார். அந்த விண்ணப்பம் பின்னர் சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடந்த மார்ச் 25-ஆம் தேதி அவர் நேரில் ஆஜராகி உறுதிமொழிப் பத்திரம் வழங்கிய பின்னரும், தமிழகச் சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி அதிகாரிகள் சான்றிதழ் வழங்கக் காலதாமதம் செய்தனர். இதையடுத்து பார்த்திபன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி தண்டபாணி, அவருக்கு வரும் ஏப்ரல் 29-ஆம் தேதிக்குள் உரிய சான்றிதழை வழங்க வேண்டும் என்று சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு உத்தரவிட்டார். மேலும், இது தொடர்பான தகவலை அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் உறுதி செய்ய வேண்டும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)